**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO.49/2019**

| | |
|---|---|
| Name: இளங்கோவன் | Caste: |
| Father's Name: வரதன்<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 26.03.2026 | |

**26.03.2026**

**விசாரணை தொடங்கிய நேரம் 03.15 PM**

**வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும் நான் டிப்ளமோ வரை படித்துள்ளேன். என்ன பரிகாரம் வேண்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய இடத்தில் அத்துமீறி நுழைந்த பிரதிவாதிகளை எதிர்த்து உறுத்துக கட்டளை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதில் உரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அவர் பாகப்பிரிவினை கோரி பதில் தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தினை எத்தனை ஐயிட்டங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு ஐயிட்டமாக தாக்கல் செய்துள்ளேன் அதன் சர்வே எண் என்னவென்றால் 571/7A1 மற்றும் 571/7A2 ஆகும். மேற்படி சொத்துக்களின் விஸ்திரணம் என்னவென்றால் 571/7A2 ஐந்து சென்ட் மற்றும் 571/7A1 நான்கு அரை சென்ட் ஆகும்.

ராஜாஜி பூங்கானின் மகன்கள் பொன்னான், துலுக்கானம், முனுசாமி என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பொன்னன் என்னுடைய அப்பாவின் தாத்தா. என்னுடைய தந்தையின் தாயாரின் பெயர் என்னவென்றால் அமராவதி ஆகும். என்னுடைய தந்தையின் தாயாரின்

பூர்வீகமான ஊர் எதுவென்றால் எனக்கு தெரியாது. மேற்படி அமராவதியின் கணவர் பெயர் நடேசன் என்றால் சரியல்ல அவரது கணவர் பெயர் மொட்டை. மேற்படி மொட்டையின் மகன் ஜிப்பு என்றால் சரியல்ல அவரது பெயர் வரதன். ஒன்றாவது பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 39/2003 என்ற உரிமையியல் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2019 தான் எனக்கு தெரியும். மேற்படி வழக்கை 1 ம் பிரதிவாதி 571/3 மற்றும் 571/7 ற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். **மேற்படி வழக்கின் தீர்ப்பாணை பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கில் என்னுடைய தந்தை வரதனின் பெயர் நான்காவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 20.07.2015 ம் தேதி 1 வது பிரதிவாதிக்கு என்னுடைய தந்தை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். **மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பின் அசல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி மொட்டையின் மகன் ஜிப்பு என்கிற சுப்புராயன் என்றால் சரியல்ல. துலுக்கானத்தின் சகோதரரான முனுசாமி மகன்கள் சுப்பு என்கிற சுப்புராயன் மற்றும் கந்தன் என்கிற கண்ணன் என்றால் சரிதான். மேற்படி கந்தன் என்கிற கண்ணனின் உடன்பிறந்த சகோதரரான சுப்பு என்கிற சுப்புராயன் மனைவி பெயர் அன்னம்மாள் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முனியம்மாள் என்பவரிடமிருந்து என்னுடைய தந்தை தாவா சொத்தின் இதர பகுதியை கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கிரயம் குறித்த ஆவணங்கள் ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்னுடைய வழக்குரையில் அந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அந்த விபரமும் எனக்கு தெரியாது.

மேற்படி 217/2019 என்ற இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் எனக்கு வழக்கறிஞர் ஆணையர் மூலம் சம்மன் சார்வு செய்யப்பட்டதா என்றால் சார்வு செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் நான் மேற்படி வழக்கில் நான் மற்றும் இதர என்னுடைய தந்தையின் வாரிசுகள் வழக்கறிஞர் வைத்து ஆஜராகி மேற்படி இடத்தை அளக்ககூடாது என பதில் தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு 39/2003 இருக்கு எதிராக மாண்புமிகு காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என்னுடைய தகப்பனாருக்கு தான் தெரியும்.

தாவா சொத்துக்களில் என்ன உள்ளது என்றால் சர்வே எண் 571/7A1 மற்றும் 571/7A2 வில் வீடு மற்றும் காம்பவுண்ட் சேர்ந்துள்ளது. ஒன்றாம் பிரதிவாதி முனுசாமியின் தந்தை பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய தந்தை வரதனுடன் பிறந்தவர் தான் அலங்காரம் என்றால் சரிதான். மேற்படி அலங்காரத்தின் தந்தை பெயர் என்னவென்றால் மொட்டை ஆகும். அலங்காரத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 வரிசைகளில் 2 வதாக உள்ள வீட்டு வரி ரசீது அலங்காரம் என்பவர் பெயரில் உள்ளது என்றாலும் அது இந்த வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றாலும் சரிதான். மேற்படி ஆவணங்களில் வழக்கு சொத்தின் சர்வே எண் குறித்த விபரம் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 571/7A1 சம்பந்தமாக என்ன ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

இந்த வழக்கு சொத்துக்களை இரண்டு வெவ்வேறு சர்வே எண்களாக தாக்கல் செய்ததற்கு காரணம் என்னவென்றால் 571/7A1 என்னுடைய தந்தைக்கு பூர்வீகமாக கிடைத்த சொத்தாகும். சர்வே எண். 571/7A2 என்னுடைய தந்தையின் அனுபவத்தில் இருந்த இடமாகும். தற்பொழுது என்னுடைய வயது 41 ஆகும். ஏதேனும் ஒரு சொத்து குறித்து

நீதிமன்றத்தில் வழக்கு நடந்து தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் அதுவே வலுவானது என்றால் சரிதான் அதுதான் செல்லுபடி ஆகும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் சர்வே எண் 571/7A2 ற்கு பழைய சர்வே எண் 571/2A ப என்றால் எனக்கு தெரியாது. 571/7A1 ற்கு பழைய சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஐ பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 ல் கண்டுள்ள முனியம்மாளின் சொந்த ஊர் அம்மையப்பநல்லூர் என்றால் சரிதான். மேற்படி முனியம்மாள் சட்டப்படியாக பெருநகரிலுள்ள பச்சைக்கிளி என்ற காதக்கிளியை திருமணம் செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

அசல் வழக்கு எண்.39/2003 ல் 2 வது பிரதிவாதியான ஜெயராமனின் மகன் சுந்தரத்தை தான் என்னுடைய சகோதரி இரண்டாவது வாதி கிருஷ்ணவேணி திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். என்னுடைய சகோதரி கிருஷ்ணவேணியின் மகள் பரமேஸ்வரியை தான் நான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் சுப்புராயனின் மகன் வரதன் என குறிப்பிட்டுள்ள விவரம் சரியா என்றால் அது தவறாகும். நான் சொல்வது தவறு என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் சர்வே எண் 571/7B தெருவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 571/7 ன் மொத்த விஸ்திரணம் 12 செண்ட் என்றால் தெரியாது. மேற்படி உட்பிரிவு செய்யப்படாத 571/7 ற்கு 12 செண்ட்டிற்கு தான் அசல் வழக்கு 39/2003 தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 9 ½ செண்ட்டு தான் நான் கோருகிறேன்.

மேற்படி ஜிப்பு (எ) சுப்புராயனின் மனைவி தனபாக்கியத்தை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி தரப்பில் நடேசன் மற்றும் அமராவதியின் மகன் மற்றும் மகள் தான் வரதன் மற்றும் அலங்காரம் என்றால் சரியல்ல. நடேசனின் சட்டப்படியான மனைவ அமராவதி

என்றால் சரியல்ல. மொட்டையின் மனைவி தான் அமராவதி. மொட்டையின் சட்டப்படியான மனைவி பெயர் செல்வி (எ) செல்வியம்மாள் என்றால் சரியல்ல. மேற்படி நடேசனுக்கும் அமராவதிக்கும் பிரச்சினை ஏற்பட்டு அமராவதி தனது தாய் வீட்டிற்கு வந்து விட்டார் என்றாலும் அதன் பிறகு தான் மொட்டையை திருமணம் செய்து கொள்ளாமல் அவருடன் வாழந்து வந்தார் என்றால் சரியல்ல. முனியம்மாள் என்பவரின் சட்டப்படியான கணவர் கந்தன் (எ) கண்ணன் என்றால் சரிதான். சுப்பு (எ) சுப்பிராயனுக்கும் அன்னம்மாளுக்கும் குழந்தைகள் இல்லை என்றால் அவருக்கு திருமணம் ஆகவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் கந்தன் (எ) கண்ணனின் காலத்திற்கு பிறகு அவருகச்கு வாரிசுகள் இல்லாத காரணத்தினால் அவரது உடன் பிறந்த சகோதரரான சுப்பு என்கிற சுப்புராயனின் மனைவி அன்னம்மாள் முதல் மற்றும் இரண்டாம் நிலை வாரிசுகளாக அவரது பாகத்தினை அனுபவித்த வந்தார் என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் தாவா சொத்தில் முழுவதுமாக நான் வீடு கட்டி காம்பவுன்ட் எதுவும் போடவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மேற்படி அசல் வழக்கு 39/2003 ன் தீர்ப்பு 07.02.2013 ற்கு பின்னர் உள்ள ஆவணங்கள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பட்டா தாவா சொத்தில் விசாரணை செய்த வழங்கப்பட்ட பட்டா அல்ல என்றால் அது கல விசாரணை அடிப்படையிலும் அல்லது பட்ட அடிப்படையிலோ வழங்கப்படவில்லை என்றாலும் எனக்கு தெரியாது.

வழக்கு சொத்தின் நான்கு பக்க எல்லைகள் என்னவென்றால் வடக்கு பக்கம் இருதயம் அவர்களின் மனை, தெற்கில் வரதன் என்பவர் மனை, கிழக்கில் தெரு, மேற்கில் ரோடு உள்ளது. என்னுடைய வழக்குரையில் குறிப்பிட்டுள்ளபடி கடந்த 40 ஆண்டுகளாக என்னுடைய

தந்தை தாவா சொத்தினை அனுபவித்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்கான பட்டா மற்றும் தாக்கல் செய்துள்ளேன்.

அசல் வழக்கு 39/2003 ல் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கும் பட்சத்தில்அந்த தீர்பானது அந்த தரப்பினர்கள் அவரது வாரிசுகளையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. வழக்கின் விவரங்கள் எனக்கு வெகுகாலம் கழித்துதான் தெரியவந்துள்ளது. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு முன் தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஒன்றாவது பிரதிவாதிக்கு சார்பாக இதற்கு முன்பாக வழக்கு சொத்து குறித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு எதிராக இந்த வழக்கை நான் தாக்கல் செய்வது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு குறித்த விபரம் எனக்கு தெரிந்த பிறகாவது நான் அதனை எதிர்த்து மேல்முறையீடு ஏதேனும் செய்தேனா என்றால் இல்லை. அந்த வழக்கின் தீர்ப்பு நடைமுறையில் இருக்கும் பட்சத்தில் அந்த வழக்கு சொத்துக்கள் எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சர்வே எண் 571/7A1 மற்றும் 571/7A2 ற்கு தாய் சர்வே எண் 571/2A என குறிப்பிடுவது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து உட்பட மொத்தமாக 571/7 சர்வே எண் விஸ்திரணம் 12 சென்டும் பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களும் தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னுடைய தகப்பானரின் கடைசி காலத்தில் நானும் அவரும் ஒரே குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். மேற்படி அசல் வழத்திற்கு எதிராக மேல்முறையீடு செய்யாமல் அல்லது விளம்புகை கோராமல் தாவா சொத்துக்கு சம்பந்தமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து முன்பாக

தீர்ப்பான நிலையில் தற்போது அதே சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. முனியம்மாள் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றது நடைமுறைக்கு வராத காரணத்தினால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 4.35 PM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**